# சமகால இலங்கை அரசியலில் ஐக்கிய தேசியக்கட்சி மீள் எழுச்சிக்கான வாய்ப்புகளும் சவால்களும்

கே. ரீ. கணேசலிங்கம்

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கை அரசியல் வரலாற்றுடன் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட அரசியல்கட்சிகளில் ஐக்கிய தேசியக்கட்சி முதன்மையானது. சுதந்திர இலங்கையின் அரசியல் திருப்புமுனையின் முன்னோடியான ஐக்கிய தேசியக்கட்சி முதல் சுதந்திர அரசாங்கத்தினை அமைத்தது. இலங்கையின் ஜனநாயக மரபினையும், முதலாளித்துவ - தாராளவாத அரசியல் சித்தாந்தத்தையும் இலங்கை மக்கள் மத்தியில் நிலைப்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்ந்தது. டி.எஸ். சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, சேர். ஜோன். கொத்தலாவல, ஜே. ஆர்.ஜெயவர்த்தனா, ஆர். பிறேமதாஸா போன்றோரின் ஆளுமைமிக்க அரசியல் தலைமைகளையும் கொண்டிருந்த கட்சியாக விளங்கியது. தற்போது ரணில் விக்கிரமசிங்ஹறாவின் தலைமைத்துவத்தின் கீழ் பல தோல்விகளைச் சந்தித்தாலும் 2002 இலும் 2015 இலும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. 2010 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டு தேர்தல்களைக் கருத்தில் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் சவால்களையும் வாய்ப்புக்களையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்காகும்.

**திறவுச்சொற்கள் :** இலவசக் கல்வி, திறந்த பொருளாதாரக் கொள்கை, விகிதாசாரத் தேர்தல், தேசிய அரசாங்கம், கணினி மோசடி, அதிகார முறைமை, எதிரிடையான சக்திகள், கருத்துருவாக்கம், கட்டுருவாக்கம், புவிசார் அரசியல்.


## 1. அறிமுகம்

ஐக்கிய தேசியக்கட்சி 1946 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆதரவு அரசியல் கட்சியாக உருவானது. குறிப்பாக இரண்டாம் உலக யுத்த முடிவும் உலக அரசியல் ஒழுங்கில் ஏற்பட்ட மாற்றமும் இலங்கை மட்டுமன்றி பிரித்தானிய குடியேற்ற நாடுகள் பலவும் சுதந்திரத்தினை நோக்கிய விதப்புரைகள் முன்வைப்பதற்கு வித்திட்டது. இதனால் இலங்கையின் ஆட்சியை முதலாளித்துவ சக்திகளிடம் கையளிக்க விரும்பிய பிரித்தானியர் ஐக்கிய தேசியக்கட்சியிடம் (இனி ஐ.தே.க என அழைப்போம்) அதனை கைமாற்றத் திட்டமிட்டனர். சோல்பரிப்பிரபு, மற்றும் சேர் ஐவர் ஜென்னிங்ஸ் (தமிழ்மாறன், வி.ரி., 2004: 19) ஆகியோரின் அனுசரணையுடன் டி.எஸ். சேனநாயக்காவின் தலைமையில் ஐ.தே.க ஆரம்பிக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட் - செப்டெம்பர் தேர்தலுக்குப் பின்னரான முதலாவது பிரதிநிதிகள் சபை அமர்வு 1947 ஒக்டோபர் 14 ஆம் திகதியன்று நடைபெற்றது (தமிழ்மாறன், வி.ரி., 2004: 19). இத்தேர்தலில் ஐ.தே.க 751432 வாக்குகளைப் பெற்று 42 ஆசனங்களைத் தமதாக்கி ஆட்சி அமைத்தது. அன்று முதல் 2015 ஆம் ஆண்டு தேர்தல்வரை தனித்தும், கூட்டணி அமைத்தும் தேசிய அரசாங்கத்தில் பிரதான பங்காளியாகவும் செயற்பட்டுவருகிறது. எதிர்க்கட்சி ஆகவும் அரசியலில் ஆதிக்கம் பெற்ற ஐ.தே.க பல தடவை தேர்தல்களில் தோல்வியை எதிர்கொண்டாலும் அதற்கு சமமான தடவை ஆட்சி அமைத்திருக்கின்றது.

இலங்கையின் அரசியலில் இலவசக்கல்வி, இலவசப்பாடநூல், மகாபொல, ஜனசக்தி, ஜனசவிய, வீடமைப்பு, துரித மகாவலி அபிவிருத்தி, திறந்த பொருளாதாரக் கொள்கை என நலன்புரி (Welfare State)

அரசை அமைப்பதில் முனைப்புக் காட்டிய கட்சியாக ஐ.தே.க விளங்குகின்றது. அவ்வகை வலிமையும், தலைமையில் நீண்ட பாரம்பரியமும் கொண்ட ஐ.தே.க வினால் 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அறுதிப் பெரும்பான்மையை எட்டமுடியாத நிலை காணப்படுவதுடன் ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெறமுடியாத நிலையிலுள்ளது. அதற்கு சரியான காரணத்தைக் கண்டறிவதும், அதன் மூலம் ஐ.தே.க வின் மறுசீரமைப்பு பற்றிய விதப்புரைகளையும் இக்கட்டுரை கொண்டுவர முயலுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிவாய்ப்பை (UPFA) உறுதிப்படுத்தியதாக அமைந்திருந்தது. இரண்டு தேர்தல்களிலும் ஐ.தே.க ஆதரவு சக்தியான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் ஜனாதிபதித் தேர்தல் தோல்வியும் பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க வின் தோல்வியும் ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. பாராளுமன்றத் தேர்தலின் முடிபுகளின்படி பெற்ற வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளின் விபரங்களை நோக்குவோம்.




ஆதாரம்: Daily Mirror, April 22,2010.


ஆய்வு முறையியலாக இரண்டாம் நிலைத் தகவல்களை முழுமையாகப் பின்பற்றுவதுடன் கால அடிப்படையில் கண்டறிதல் முறைமையின் ஒரு பிரிவான அவதானிப்புகள் வாயிலாக முடிபுகளை எட்ட முயலுகிறது.

**2010 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் முடிபுகள்**

*2010* ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக மலர்ந்திருந்தது. அதில் ஜனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் ஆளும்


விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையின் கீழ் இலங்கையின் கடந்தகால அனுபவத்தின்படி சாதாரண பெரும்பான்மையை எட்டுவது மட்டுமேமுடிந்ததொன்றாக அமைந்திருந்தது. அதனை முறியடித்து முதல்தடவையாக *2/3* பெரும்பான்மையை அண்மித்த முடிபுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றி *(144/150)* எட்டியுள்ளது ( Melinda Seneviratine., 2000:4). இது இலங்கையின் அண்மைய தேர்தல் பதிவுகளில் புதிய அனுபவமாக

உள்ளது. குறிப்பாக விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் 1989 இல் 125 ஆசனத்தினை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக் கொண்டது. 1994 இல் பொது ஜன ஐக்கிய முன்னணி 105 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. 2000 ஆம் ஆண்டு பொ.ஐ.ஐ.மு 107 ஆசனங்களை பெற்றுக்கொண்டது. 2001 இல் ஐ.தே.க (UNP) 109 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. 2004 இல் ஐ.ம.சு.மு 105 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது (அரசரெத்தினம், எஸ்., 2004). இதனாலேயே 2010 தேர்தல் அதிமுக்கியம் பெற்றதொன்றாகக் காணப்படுகிறது. இதற்கான காரணமாக மக்களின் வாக்களிப்பு பிரதான கட்சிகளை நோக்கியதாக அமைந்ததுடன் அவற்றை மையப்படுத்தி வாக்குக்குவிப்பு அதிகரித்திருந்தது( Melinda Seneviratine., 2000:4). மேலும் உதிரிகளான கட்சிகளும், பிரிவுகளும் ஒரே அரசியல் கட்சிக்குள் இணைந்திருந்தமையும், ஒரே அரசியல் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டமையும் பிரதான காரணம் எனக் கருதப்படுகின்றது( Melinda Seneviratine., 2000:4). எதுவாயினும் இலங்கையின் விகிதாசாரத் தேர்தலின் அனுபவத்தில் 2010 தனித்துவமானது. ஆனால் ஐ.தே.க வுக்கு அதிர்ச்சியானது. இதுவரை நடந்த விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தலில் ஐ.தே.க இவ்வகை மோசமான தோல்வியை




ஆதாரம்:- www. daily mirror . lk

**ஐ.தே.க வின் கடந்தகால தேர்தல் முடிபுகள் பற்றிய ஒப்பீடு (1989 - 2000)**




எதிர்கொள்ளவில்லை என்றே கூறலாம். இதன் அடிப்படையில் 2010 தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்களின் முழுவிபரத்தையும் நோக்குவோம்.


மேலே தரப்பட்ட அட்டவணையின் அடிப்படையில் ஐ. தே.க இன் தேர்தல் முடிபுகளில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது 2010 அதிக பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. அரசமைக்கும் போதும் எதிர்க்கட்சியாக பாராளுமன்றத்தை நிரப்பீடு செய்யும் போதும் சமநிலைத் தன்மையை ஐ. தே.க பேணமுயன்றிருந்தது. ஆனால் 2010 ஜனாதிபதி தேர்தலில் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்த போது கடந்தகால கூட்டணி அமைப்புக்களிலிருந்தும் பாரிய வேறுபாட்டைக் கடைப்பிடித்தது. அதிலும் வீழ்ச்சியை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இதற்கான காரணத்தை ஆராய்வது அவசியமானது. அத் தேர்தலில் கட்சியின்தலைமையை விட பொன்சேகாவுக்கு கொடுத்த முக்கியத்துவம் ஐ. தே.க பேரில் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. 2010 தேர்தலில் கணினி மோசடி இடம் பெற்றதாக கூறப்படுவதை வெறும் ஊகங்களாக ஒதுக்கிவிட முடியாது. பொன்சேகாசமர்ப்பித்த தேர்தல் ஆட்சேபனை மனுவை தொழில்நுட்ப குறைபாடெனசுட்டிக்காட்டி மேல்முறையீட்டு நீதிமன்றம் அவசரமாகதள்ளுபடி செய்தமையும் திருத்திய ஆட்சேபனை மனுவை சமர்ப்பிக்க அனுமதி மறுக்கப்பட்டமையும் சர்ச்சைக்குரிய விடயமாகும். மேலும் தேர்தல் முடிபுகள் வெளிவந்து கொண்டிருக்கும் போதே தேர்தல் ஆணையாளர் அலரிமாளிகைக்கு அழைக்கப்பட்டமையும் தொடர்ந்து இரு நாட்கள் அவர் வதிவிடம் அறியாதவராக வாழ்ந்தமையும் சந்தேகத்தை மேலும் பலப்படுத்துகிறது.

### 2015 தேர்தலில் ஐ. தே. க

2015 தேர்தல் முன்னாள் ஜனாதிபதியை தோற்கடிக்க வேண்டுமென்ற முனைப்புடன் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவும் மேற்கொண்ட முயற்சிகள் ரணில் விக்கிரமசிங்ஹாவுக்கு மேலதிக வாய்ப்புக்களை வழங்கியது. இது மட்டுமன்றி ஐ. தே. க மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து உடைந்த தரப்புகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு தேசிய அரசாங்கத்தை அமைப்பதிலும் எதிர்க்கட்சியை உருவாக்குவதிலும் பிராந்திய சர்வதேச சக்திகளின் பங்களிப்பு முதன்மையாக விளங்கியது. 2015 இல் அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் அனைத்து உருவாக்கத்திற்கும் செயல்பாட்டிற்கும் பின்னால் அமெரிக்க - இந்தியக் கூட்டு முனைப்பான கவனம் செலுத்திவருகிறது. இது ரணில் விக்கிரமசிங்ஹாவுக்கான வெற்றி மட்டுமல்ல இந்திய - அமெரிக்க கூட்டும் அவர்றின் நலனுக்கு விரோதமான முன்னைய அரசாங்கத்தினை வீழ்த்தும் உபாயமே ஐ. தே.க வின் வெற்றியாகும். அத்துடன் சிறுபான்மையினர் ஐ. தே.க வுக்கு ஆதரவாக செயல்பட்டமையும் வெற்றியை உறுதிப்படுத்தியது. அதனால் ரணில்விக்கிரமசிங்ஹாவின் கனவான் அரசியல் வெற்றி பெறுவதற்கான வாய் பொன்று கிடைத்தது. இதனை பேணுவதும் பாதுகாப்பதும் தற்போதைய ஆட்சியாளரின் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டுக் கொள்கைகளிலேயே தங்கியுள்ளது. இதன் மூலமே ஐ. தே.க வின் எதிர்கால இருப்பும் ஆட்சிக்கானவாய்ப்புகளும் நிர்ணயிக்கப்படும். புதிய பொருளாதார திசையை நோக்கிய நகர்வுக்கான உலக நோக்கு வளர்ந்த போதும் தற்போதைய அரசாங்கம் அதில் முனைப்புக்காட்டாமை அல்லது அதற்கான வேகம் கனதிகுறைந்து காணப்படுவது வாய்ப்புக்களை தவறவிடுவது போல் தெரிகிறது. உலகத்தினால் உருவாக்கப்பட்ட ரணில் - மைத்திரி ஆட்சியை பலப்படுத்த வேண்டிய பொறுப்பு தற்போதைய தேசியஅரசாங்கத்திற்குரியது. அதிலும் ஐ. தே. க முதன்மை பெறும் நிலையில் இருந்த போதும் நடைமுறையில் சரியாகவும் சாதுரியமாகவும்




**பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் - 1947 - 2015**




ஆதாரம்:தேர்தல் திணைக்களம் கொழும்பு. -2015

பயன்படுத்த கட்சி தயாராக வேண்டும். அத்தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்குகளை அவதானிப்போம்.

**கட்சியின் தலைமைத்துவம்**

தற்போது ஐ. தே.க தலைமைத்துவம் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இரத்த உறவான (மருமகன்) ரணில் விக்கிரமசிங்ஹவிடம் (2015) உள்ளது. ரணில் விக்கிரமசிங்ஹவைப் பொறுத்தவரை நீண்ட அரசியல் அனுபவம் உள்ளவர் மட்டுமன்றி பல தேர்தல்களில் தொடர்ச்சியான தோல்விகளை கட்சி சந்திக்க வேண்டிய நிலையிலும் தலைமைத்துவத்தை தக்கவைத்துக் கொண்டவர் (M.S.M. Ayub; 2000 : 4). ஆனால் இவரது தலைமைத்துவம் மீது அதீதமான விமர்சனமும் எதிர்ப்புக்களும் வெளிவந்துள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சம். ரணில்விக்கிரமசிங்ஹவைப் பொறுத்தவரை அவரது ஆளுமையில் கவர்ச்சிகரமில்லாத (Non - Herismetic) தலைவர் என்பது வெளிப்படையாகக் கூறப்படும் குற்றச்சாட்டாகும். அவரை உடையில் காண்பதோ, விசேட அடையாளங்களை சேர்த்துக் கொள்வதையோ, சாதாரண சிங்கள மக்களுடன் கைகோர்ப்பதிலோ எந்த விதமான முக்கியத்துவத்தினையும் கொண்டிருக்க காதவராகத் தென்படுகின்றார். இலங்கையின் அரசியல் சுதேச பண்பாட்டு வெளிப்பாடுகளே பண்டாரநாயக்கா முதல்(திருநாவுக்கரசு, ம., 2007: 9-10) இன்றுவரைகாணமுடிகிறது. பண்டாரநாயக்கா மேற்கு லகில் கல்விகற்றபோதும் இலங்கையின் அரசியலுக்குள் நுழைவதற்கு சுதேச ஆடையும் சுதேச அடையாளமும் அடிப்படையாக அமைந்தது. இது ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் உண்டு. பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது களனி நெல்வயலை மாட்டுக்கலப்பையால் உழவு செய்யும் காட்சி(Dissanayaka, T.D.S.A., 1977:1) அவரது சுதேச அடையாளமாக பார்க்கப்பட்டது. இவை எதையும் ரணில் விக்கிரமசிங்ஹ தனது அரசியல் வாழ்வில் கடைப்பிடித்ததாக தென்படவில்லை. ஜனநாயக அரசியல் என்பது மக்கள் சார்ந்த அரசியல். அதனை அடைவதற்கு மக்கள் பக்கம் அதிலும் கிராமிய கட்டமைப்பைக் கொண்ட இலங்கையில் அதிகம் சுதேச பண்பாட்டை சார்ந்து செயல்படுதல் வேண்டும். அவற்றுக்கு ரணில் விக்கிரமசிங்ஹ முக்கியத்துவம் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்வதுடன் ஐ. தே.க இன் பலத்தினை கிராமிய மட்டத்தில் வலுவான சக்தியாக மாற்றமுடியாதவராக உள்ளார். ஐ. தே. க வின் கிராமிய பலத்தை உருவாக்கியதில் டி. எஸ். சேனநாயக்காவுக்கிருந்த பலத்துக்கு(Bradman Weerakoon., 2004 : 380 - 384) நிகராக ஆர். பிரேமதாஸாவுக்கும் இருந்தமையே அதன் கிராமிய வாக்கு வங்கியைப் பலப்படுத்தி ஆட்சியமைப்பதில் சாத்தியப்பாட்டை எட்டினார். இதில் பிரேமதாஸா அளவுக்கதிகமான முக்கியத்துவத்தினை நகரத்திற்கு இணையாக கிராமிய மட்ட பங்கேற்பிற்கு கொடுத்திருந்தார். ஆனால் ரணில் விக்கிரமசிங்ஹா சிறந்த ராஜதந்திரியாகவும் மதிநுட்பம் வாய்ந்த அரசியல் வாதியாகவும் சர்வதேச மட்டத்தில் மிகச் சிறந்த அரசியல் தலைவராகவும் மதிக்கப்படுகிறார்(Ilica Malkanthi Karunaratne., 2010: ). விடுதலைப்புலிகளை அரசியல் ரீதியில் எதிர்கொண்டு வெற்றி பெற்ற சிங்கள அரசியல் தலைவராக சிங்கள உயர்தர மற்றும் மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் மதிக்கப்படுகிறார். ஆனால் உள்ளூர் மட்டத்தில் சாதாரண மக்கள் மத்தியில் அந்தளவு ஆதரவை அவர் பெறத்தவறினார். குறிப்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வு பெருந்தோட்டத்துறை மேம்பாடு கிராமியப் பொருளாதார மறுமலர்ச்சி சிறிய நடுத்தர கைத்தொழில்துறை வளர்ச்சி போன்றவற்றில் ரணில் விக்கிரமசிங்ஹாவின் அசமந்தப் போக்கு கிராமிய மக்களின் ஆதரவை திரட்ட முடியாமைக்கான வலுவான

காரணமாகக் கொள்ளமுடியும். இவற்றில் காட்டப்படும் தூரநோக்கற்ற செயல் அவரது அரசியல் வெற்றிகளை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றது. இவரது கனவான அரசியல் நிதானமானது மட்டுமன்றி ஒரு புதிய திருப்பத்தினை தரவல்லதாக அமைந்திருந்தது. அதுமட்டுமன்றி ரணில் விக்கிரமசிங்ஹாவின் தலைமைத்துவம் கட்சிக்குள்ளும் அதற்கு வெளியேயும் அதிக எதிரிடையான சக்திகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனாலும் 2015 இல் ஐ. தே. க வின் வெற்றியானது ரணில் விக்கிரமசிங்ஹாவின் கனவான் அரசியலுக்கு கிடைத்த வெற்றியாகும். விலைவாசியைக் குறைத்தமை இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்பை ஏற்படுத்த முன்வந்தமை என்பன அவரால் முன்னெடுக்கப்படும் புதிய விடயங்களாக உள்ளமை பொருத்தப்பாடாதாக அமைந்தாலும் சரியான முன்னெடுப்பு அவசியமானதாகும்.

அரசியல் தலைமைகளிடம் காணப்படும் இன்னோர் இயல்பு புத்துணர்ச்சி ஊட்டும் தலைவராக செயல்படுதல். அந்தவகையில் ஐ. தே.க க்குள் அதிகமான புத்துணர்ச்சியான அரசியலை மேற்கொண்டவராக பிறேமதாசா காணப்படுகின்றார். அவரது ஆட்சிக்காலம் முழுவதும் அக்காலப்பகுதி அரசியல் வடிவத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டப்படுவதாக அமைந்திருந்தது. அதனோடு ஆர். பிறேமதாஸா ஏற்படுத்திய அரசியல் புதிய நிறைவேற்றிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையில் ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக இலங்கை அரசியலில் நிறைவேற்று அதிகார முறைமை (Executive Presidental system) கவர்ச்சிகரமானதாகவும், ஆளுமை நிறைந்ததாகவும் அதிகாரம் பொருந்தியதாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும். இது மேற்குமாதிரியையும் (Westminister) இலங்கையின் புராதன கால முடியாட்சி அம்சங்களையும் உள்ளடக்கியதொன்றாக அமைந்துள்ளது. ஆனால் நிறைவேற்றிகார ஆட்சிக்கு அவற்றோடு வன்முறை அரசியல் மாதிரியையும் (Violence Political Modle) அவசியமானதென்பதை உணர்த்தியது(திருநாவுக்கரசு, மு., 2007 : 16). இதனை ஜே.ஆர். ஜெயவர்த்தனா மிக குறைந்த அளவில் பயன்படுத்தினார். ஆர். பிறேமதாஸா மிக உச்சளவில் பயன்படுத்தியது டன் அதுவே அவரது ஆட்சிமுறைமைக்குரிய அடிப்படையாகவும் அமைந்திருந்தது. அதாவது மிதவாதமும் தீவிரவாதமும் கலந்த ஓராட்சி முறைமை அதிகமாக வளர வாய்ப்பாக நிறைவேற்றிகார ஆட்சி இலங்கையில் அமைந்தது. இது நவீன முடியாட்சிக்குரிய இயல்பினை காண்பிக்கும் அம்சமாக உள்ளது. இதில் தேர்ச்சியும் செயல்வடிவமும் உடையவர்களே நிறைவேற்றிகார ஆட்சியைக் கைப்பற்றவோ தக்கவைக்கவோ முடியும் என்ற நிலையை ஏற்படுத்திவிட்டது. இத்தகைய ஆளுமை தற்போதைய ஐ. தே. க வின் தலைமைக்கு அவசியமானது. இது இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத அரசியல் பண்பாடாக வளர்ந்துவருகின்றது. ஆனால் 2105 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் ஆட்சியின் இயல்பானது ஏறக்குறைய கனவான் அரசியலுக்கானதே ஆகும். இத்தகைய வெற்றிக்குப் பின்னால் பல காரணிகள் இலங்கைக்கு வெளியே செல்வாக்குச் செலுத்தியிருந்தன என்பதை கவனத்தில் கொள்வதே 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை மதிப்பிடக் கூடியதாக அமையும். இதற்காக இணைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவும் கனவான் அரசியலையே இலங்கையில் கட்டிவளர்க்க முயலுகின்றார்.

### மாறியுள்ள அரசியல் பொருளாதார கட்டமைப்பு

புதிய உலக ஒழுங்குக்குப் பிந்திய வடிவம் உலகளாவிய மட்டத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. அது சர்வதேச, பிராந்திய அரசியலை மட்டுமல்ல

உள்நாட்டு அரசியல் பொருளாதார அமைப்பிலும் மாற்றங்களை அரசியல் பொருளாதாரத்தில் செய்யத்தவறவில்லை. அந்தவகைக்குள் இலங்கையின் அரசியலிலும் பொருளாதாரத்திலும் உலகமயவாக்கம் கொள்கைவடிவமற்ற மனித சமுதாயத்தை உருவாக்கிவிட்டுள்ளது. இதிலிருந்து அரசியல் கட்சிகளோ அல்லது ஐ. தே. க கட்சியோ விலகியிருக்க முடியாத நிலை எழுந்துள்ளது. தற்போதைய அரசியற்கட்சிகளில் எவற்றுக்கும் தெளிவான வரையறுக்கப்பட்ட, சார்பான கொள்கையை கடைப்பிடிப்பது கடினமாகிவிட்டது. குந்தர்பிராங் குறிப்பிடுவது போல் எதிர்முரணிய வரைபிற்குள்ளேயே கட்சிகளும் கட்சிகளின் கொள்கைகளும் அமைந்திருப்பது போல் அரசுகளும் அரசுகளை இயக்கும் அரசாங்கங்களும் செயற்படுகின்றன(அந்ரே குந்தர் பிராங்., 1991 :). இவ்வகை அரசாங்கங்களை உருவாக்கிவரும் கட்சி முற்றாக நிலைகுலைக்குட்பட்ட உள்நாட்டு அரசியல், பொருளாதார சமூக கொள்கைகளை வரைவது போல் வெளிநாட்டுக் கொள்கைகளையும் வடிவமைத்து வருகின்றன. இதனால் தெளிவான வரையறைக்குட்பட்ட கொள்கை வடிவம்அரசியல் கட்சிகளிடம் அருகிப்போயுள்ளது. அமெரிக்காவையும் சீனாவையும் இந்தியாவையும் ஒரே தளத்தில் கையாளும் வெளிநாட்டு அரசியல் அமைப்பையும், முதலாளித்துவத்தையும், தாராள முதலாளித்துவத்தையும் தனியார் முதலாளித்துவத்தையும் சமவுடமை தத்துவத்தையும் கலப்புப் பொருளாதார தத்துவத்தையும் ஜனநாயக அரசியல் தத்துவத்தையும் ஒருங்கே சேரும் கொள்கைப் போக்கினை ஐ. தே. க கொடுக்கத்தவறிவிட்டது என்று கூறிவிட முடியாதவகைக்குள் ஆட்சியை அமைப்பது அவசியமாகியது. அது அவ்வவ்போது தனித்துவமான தாராளப் பொருளாதாரப் போக்கினைக் கடைப்பிடித்தாலும் கலப்பு பொருளாதார பொறிமுறையை பின்பற்ற தவறவில்லை.

பொருளாதார நலனே உலக அரசுகளின் உறவிற்கும், பிரிவிற்கும் காரணம் என்பதை ஐ. தே. க வின் அரசியல் கொள்கை வகுப்பாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டிய அம்சமாகும். பொருளாதார இலாபங்களே அரசியல் இருப்புக்களை நிர்ணயம் செய்கின்றன. அந்தவகையில் இன்றைய பொருளாதாரம் சந்தைப்பொருளாதாரம். அதை நோக்கி உலகளாவிய நேரடி முதலீடுகளும் உற்பத்திகளும் ஒன்றுசேருகின்றதே அன்றி அரசியல் கொள்கைகளுக்காக ஒன்று கூடவில்லை. அதனால் அரசுகளையும் அரசுகளின் பொருளாதார முதலீடுகளையும் ஓர் இடத்தில் குவிப்பதற்கான உலக சந்தையை நோக்கி ரணில் விக்கிரமசிங்ஹ தலைமையிலான ஐ. தே. க கண்டுகொள்வது அவசியமானது. நவ - தராளவாதத்தின் குறியீடாக ரணில்விக்கிரமசிங்ஹா காணப்பட்டாலும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவர்வதில் ஏனைய உலகத் தலைவர்களுக்கு நிகரானவராக கண்டுகொள்ள முடியவில்லை. உரிமைகளையும், ஜனநாயகத்தையும் பொருளாதார இயக்குவிதிக்காக அரககள் கைவிட்டுவிட்ட வரலாறு கடந்த பல தசாப்தங்களாக பதிவிலுள்ள அம்சமாகும். இதனை தென்கிழக்கு ஆசிய நாடுகள் பல தசாப்தங்களுக்கு முன்பே கைவிட்டுவிட்டன(கணேசலிங்கம், கே. ரீ.; திருக்குமரன், ரீ., 2006). அந்த நாடுகளின் பொருளாதார சுபீட்சத்திற்காக ஜனநாயகத்தினை முடிவிற்கு கொண்டு வந்ததுடன் தனிக்கட்சி ஆதிக்கத்தினை பின்பற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. கிழக்காசிய நாடுகளைப் போன்றுபுவிசார் அரசியல் தன்மை இலங்கைக்கு அமையாத போதும் வர்த்தகத்தை விருத்தி செய்யக்கூடிய அரசியல் கொள்கையைக் கொண்டு இயங்குவது பொருத்தமானது. காரணம் இந்துசமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருப்பது அதற்கான வாய்ப்பினை மேலும் பலப்படுத்துகிறது. எனவே பொருளாதார இயங்குவிசையினையும் அரசியல் சமூகக் கொள்கைகளையும் புதிய

உலக ஒழுங்கின் மாறுதல் காலவிதிகள் உருவாகியுள்ளன. 2002 ஆம் ஆண்டில் ஐ. தே. க தலைமையிலான அரசாங்கத்தினை கலைப்பதற்கு வழிவகுத்த ஐ. தே. க வின் உள்நாட்டு வெளிநாட்டு கொள்கைகள் ஐ. தே.க தலைமையால் கருத்தில் கொள்ளப்பட்டது என்பது 2015 இல் உணரப்படவேண்டும். 2002 இல் உள்நாட்டுக் கொள்கையில் உடன்பாடும் வெளிப்படைத் தன்மையும் பிராந்திய அரசியலில் தந்திரோபாயத்தையும் கருத்தில் கொண்டிருந்தால் ஐ. தே. க தனது ஆட்சியை தக்கவைத்திருக்க முடியும்(சந்திரசேகரன், எஸ்., 2009 : 12).

**ஆயுதப்போராட்டங்களால் ஏற்பட்ட மாற்றம்**

இலங்கை அரசியல் வரலாற்றில் பெரியளவில் எழுச்சி பெற்ற ஆயுதப் போராட்டங்கள் தற்காலிகமாக முடிவிற்கு வந்துள்ளன. தென்னிலங்கையில் எழுச்சிபெற்ற ஜே. வி. பி (Janatha Vemuthi Paramuna) இன் ஆயுதப்போராட்டமும் வடகிழக்கில் எழுச்சியடைந்த தனிநாட்டுக் கோரிக்கைக்கான ஆயுதப்போராட்டமும் முடிவிற்கு வந்துவிட்டதென்பதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் இவ்வகை இரண்டு ஆயுதப்போராட்டமும் ஆயுத ரீதியிலும் அரசியல் ரீதியிலும் சமூகமயமாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. ஆயுத ரீதியான வன்முறையைக்காட்டிலும்சாதாரணகிராமமிய மக்கள் மத்தியில் அரசியல் மயவாக்கத்தினால் (Politicalization) கணிசமானஅளவு கிராம மக்கள் மத்தியில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அவை மாக்சிஸ அரசியல் மரபுகளுடன் நெருக்கமான காரணிகளை முதன்மைப்படுத்தி அரசியல் சமுதாயமயப்படுத்தலை மேற்கொள்ள உதவியுள்ளன(Jeyadeva Uyangoda., 2004 : 8 ). இதனால் மக்கள் அரசியல் கட்சிகளையும் தலைமைகளையும் அவர்களின் அரசியல் நடத்தைகளையும் (Behavioral Politics) இலகுவாகவும், விரைவாகவும் தெரிந்து கொள்வதில் கவனமெடுக்கின்றனர். அரசியல் தலைமைகளையும் அவர்கள் முன்வைக்கும் மாற்றங்களையும் மக்கள் அரசியல் கட்சிகளினதும் நடத்தைகளை ஊன்றி அவதானிக்கின்றனர் (Jeyadeva Uyangoda., 2004 : 5-6 ).

வடக்கு கிழக்கின் ஆயுதப்போராட்டம் முடிவிற்கு வந்துள்ளனவே அன்றி அவர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை நிறைவு செய்யக்கூடிய நடவடிக்கையில் ஐ. தே. க ஈடுபடவேண்டும். அதன் தலைமை வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுவதில்லை என்ற குறைபாடு நிலவுகிறது. இதனை நீடிக்க அனுமதிப்பது பொருத்தமற்றது. காரணம் தமிழ் மக்களின் வாக்குகளினாலேயே 2015 ஆம் ஆண்டு அரசியல் மாற்றம் சாத்தியப்பட்டதென்பது மட்டுமன்றி 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்காமையே ரணில் விக்கிரமசிங்ஹாவின் தோல்விக்கான காரணமாகும். எனவே ஐ. தே. க வும் அதன் தலைமையும் கடந்த கால அனுபவங்களைக் கருத்தில் கொள்வது அவசியமானது.

**பிரச்சாரம்**

அரசியல் நடிபங்கின் பிரதான சாதனமாக பிரச்சாரம் மாறிவிட்டது. குறிப்பாக மரபுசார்ந்த தொலைத்தொடர்பு சாதனங்களுடன் மின்னணுச்சாதனங்களின் வருகை இலங்கை மக்களுக்கு அரசியலை அறியும் ஆவலை அதிகரித்துள்ளது. ஆரம்பத்திலிருந்தே இத்தகைய மின்னணுச்சாதனத்தை பிரயோகிப்பவர்களாக மத்தியதர வர்க்கமும் உயர்வர்க்கமும் ஈடுபட்டுவருகின்றனர்(புலி - யானை பற்றிய உடன்படிக்கையின் பிரச்சாரத்தினை தென்னிலங்கையில் ஐக்கியதேசியக் கட்சியினால் முறியடிக்கமுடியவில்லை. இவ்வாறு பல அம்சங்கள் ஐ.தே.க வுக்கு பாதிப்புக்குரியதாகியது). இவர்களேஒவ்வொரு நாட்டின் அரசியலிலும் தீர்மானம் எடுக்கும் வலுவுடையவர்களாக விளங்குகின்றனர். உயர்,

மத்திய தரவர்க்கம் மின்னணுச்சாதனங்களைப் பயன்படுத்தி தமக்கிடையே தெளிவான ஒரு வலைப்பின்னலை செய்துள்ளன. தமது எண்ணப்பட்டையும் சிந்தனையையும் ஊடகங்கள் வாயிலாக பிறருக்கும் அவர்களின் மூளைகளுக்கும் உணர்த்தும் உத்தியானது மிகப்பெரிய பிரச்சாரம் ஆகிவிட்டது. இதனால் ஆளும், எதிர்தரப்பு என்பதற்கு அப்பால் பிரச்சாரம் எல்லோரையும் வெற்றிகண்டுவருகிறது. அரசியல் மயமாக்கப்பட்ட பிரச்சாரம் நியாயப்பாடுகளைக் கடந்து மக்கள் மத்தியில் அதித செல்வாக்கை செலுத்திவருகிறது. இப்பிரச்சார அணுகுமுறையை அரசியலில் ஈடுபடுத்தும் பாரம்பரியக் கட்சிகள் பலவீனமடையுமாயின் கட்சி அரசியல் நெருக்கடிக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகும்.

கடந்த பல தேர்தல்களில் ஐ.தே. கவின் பிரச்சாரத்தின் பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான நிர்ப்பந்தம் தவிர்க்கமுடியாததாக இருந்தது. ஆனால் பிரச்சாரத்திற்கான உத்தியை உருவாக்குவதும் கையாள்வதிலும் பழைய மரபுசார்ந்த அம்சங்களைக் காட்டிலும் நவீனமான வழிமுறைகளைப் பயன்படுத்தும் நுட்பம் சார்ந்த அறிவினுடைய பிரிவின் பங்களிப்பு அவசியமானது(Joseph Dominick., 1994 : 556 - 557). அதனை உருவாக்குவதன் மூலமே இந்த அரசியல் சமூகத்தையும் கட்சியமைப்புகளுடன் இணைத்துக் கொள்ள முடியும். இதில் ஐ. தே. க அதிக கவனம் கொள்ளுதல் அவசியமாகும். நல்லாட்சி(Good Govenence) அரசியல் பற்றிய தேர்தல் பிரச்சார உத்திகளை முன்வைக்கும் ரணில் - மைத்திரி அரசாங்கம் நல்லாட்சியின் உட்கூறுகளைப் பேணவும் வேண்டும். பிரச்சாரம் அல்லது பிரச்சாரத்திற்கான தேர்தல் விஞ்ஞாபனம் என்பன குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் மக்களிடம் இருக்கும் என்று கூறமுடியாது. அதனை கட்சிகளோ அல்லது தலைமைகளோ அமுல்படுத்த தவறினால் அடுத்துவரும் தேர்தலில் அதற்கான பதில்களை மக்கள் வெளிப்படுத்தும் மரபை கொண்டிருப்பர் என்பது புதிய அனுபவமல்ல.

### போருக்குப் பிந்திய இலங்கை

தென் இலங்கையின் கருத்துருவாக்கத்தின் படி போருக்கு பிந்திய இலங்கையின் கட்டுருவாக்கம் என்பது புதிய பரிணாமமாக மாறியுள்ளது. இதனால்முழுமையானகொள்கை மாற்றங்களும் விருத்திக்கான பங்குபற்றலும் சர்வதேச, பிராந்திய கட்டமைப்புகளின் பிரவேசமும் அதிகரித்துவிட்டது. இதனால் போர் வெற்றிகளைக் காட்டிய தேர்தலாக 2010 தேர்தல் அமைந்தாலும் அதனை முழுமைபடிக்க முடியாத நிர்ப்பந்தம் ஆளும்தரப்பிற்கு சமமாக எதிர்தரப்பான ஐ. தே. க போரில் தனது பங்கினை நிலைநாட்ட முயன்றது(Melinda Seneviradne., 2000 : ). 2010 ஜனாதிபதித் தேர்தலில் சரத்பொன்சேகாவை நிறுத்தியதன் நோக்கமும் அதுவேயாகும். ஆனால் 2015 தேர்தல் அதன் விளைவுகள் அம்பலமானதைக் காணலாம். அரசியல் கட்சி வரலாற்றில் பாரிய நெருக்கடியை போருக்கு பிந்திய காலம் ஏற்படுத்திவருகிறது. எனவே ஐ. தே. க மீளுருவாக்கத்திற்கான உபாயம் போருக்கு பிந்திய இலங்கையின் மீளுருவாக்கமாக அமைதல் தவிர்க்கமுடியாத சூழலாக பரிமாணம் எடுத்துவருகிறது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் சர்வதேசப் பொருளாதார தலையீட்டின் அரசியல் தன்மையும் கட்சி அரசியலுக்குள்ளால் சரிசெய்யப்பட வேண்டும். அவ்வகை அரசியல் பிரவேசத்திற்குள் வேகமாக செல்லும் பலமும், சித்தாந்தமும் ஐ. தே.க வுக்கு பிற அரசியல் சக்திகளைவிட அதிகமாக இருந்தபோதும் அதனை செயல்வடிவம் கொடுக்கும் தலைமை அவசியமானதாகும்.

### முடிவுரை

இலங்கை அரசியல் தொடர்ச்சியில் இருகட்சிபாரம்பரியம் சுதந்திரத்திற்குப் பின்பு

வளர்ந்துள்ளது. இருகட்சிப் பாரம்பரியத்தினை ஆசியாவுக்குள் மிக நீண்டகாலமாக பின்பற்றிய நாடு என்ற பெருமை இலங்கைக்கு உரியது. அதனை முடிவுக்கு கொண்டுவரும் பதிவில் ஐ.தே.கவின் பங்கு அதிகரித்துவருகிறது. இதனால் ஏற்படப்போகும் அரசியல் வெற்றிடம் தவிர்க்க முடியாது. சிறுபான்மை சமூகங்களிடம் கைமாறவாய்ப்பு உண்டு. அதுமட்டுமன்றி ஒரு கட்சி அரசியல் தென்கிழக்கு, கிழக்கு ஆசியப்பாணியில் வளருமாயின் ஐ.தே.க வின் அடிப்படையே பாதிப்புக்குள்ளாகலாம். முன்வைக்கப்படவுள்ள அரசியலமைப்பில் உருவாகும் தேர்தல் விதிகள் ஐ.தே.க வுக்கு நெருக்கடியை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. அதனால் புதிய உபாயத்தையும், தந்திரத்தையும் கையாண்டு அதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதே இலங்கையின் எதிர்கால ஜனநாயகம் சாத்தியமாகும். அதனை நோக்கி கட்சியின் தலைமை, பாராளுமன்ற பிரதிநிதிகள், கட்சியின் பிரதிநிதிகள் பணியாற்றுவது தவிர்க்கமுடியாத அரசியல் நடவடிக்கையாக உள்ளது. *1977* ஆம் ஆண்டிலிருந்து *1994* வரை ஐ.தே.க தனித்து ஆட்சி செய்தது. அதன் பின்பு கூட்டணி அமைத்தும் எதிர்கட்சியாகவும் அதிக காலத்தை எடுத்துக் கொண்டது. அத்தகைய கருத்தை உடைத்து புதிய பாதையை அமைப்பது ஐ.தே.க வின் மீளுருவாக்க (Rebirth) நடவடிக்கையிலே தங்கியுள்ளது(Dayan Jeyatilake., 2010 :). *2015* தேர்தல் ஐ.தே.க வை நிலைப்படுத்த உதவும் காலம் என்பதைக் கருத்தில் கொள்வது பொருத்தமானதாகும்.

## References


1. வி.ரி. தமிழ்மாறன்., (ஏப்ரல் *2004*) ***அரசியலமைப்பாக்கச் சிந்தனைகள்***, மதுரிமலர் அகம் இரண்டாம் பதிப்பு பக்,*19*.
2. மேற்படி நூல்.,
3. Melinda, Seneviratine., 'Victory is a curse will many dimension', Daily mirror, April *22, 2000*, p.*4*.
4. பார்க்க எஸ். அரசரெத்தினம்., (யூலை *2004*) ***இலங்கை அரசியல் வரலாறு***, குட்வின் அச்சகம், கல்முனை.
5. Melinda, Seneviratine., - do -
6. Melinda, Seneviratine., 'Counter democratic communalist thrust of reinventing 'ethnic conflict', www. daily mirror. lk.
7. M.S.M. Ayub., 'The Options Before the JVP after the General Election.' www.daily mirror. lk, *2000* p.*4*.
8. Ibid.
9. மு. திருநாவுக்கரசு., (*2005*), ***கொழும்பு - 2007.*** அறிவமுது, பக். *09 - 10*.
10. T.D.S.A. Dissanayaka., '*J.R. Jayeweardene of Sri Lanka*'. Swastika press. Colombo, Sri Lanka, August. *1977, 1*
11. See, Bradman Weerakoon, (2004)*Rendering Unto Caesar, A Fascinating Story of one Man*'s Tenure under nine Prime Ministers and Presidents of Sri Lanka, Vijitha Yapa, Sri Lanka, Pp*330-384*.
12. Ilica Malkanthi Karunaratne: 'Those unforgettable Dudley years' , Daily mirror, Colombo, Sri Lanka, April *13, 2010*.
13. மு. திருநாவுக்கரசு., ப. *16*.,

14. அந்ரே குந்தர் பிராங், ‘உலக அரசியல் பொருளாதாரத்தில் எதிர் முரண்நிலைகள்’, பொருளியல் நோக்கு, இதழ் *17, 1991.*
15. கே. ரீ. கணேசலிங்கம், ரீ. திருக்குமரன் *(2006)*, ***சேதுக்கால்வாய்த்திட்டம் : அரசியல் பொருளாதார பாதுகாப்பு சுற்றுச்சூழல் நோக்கு***, பிரம்ம வெளியீடு யாழ்ப்பாணம்.
16. எஸ். சந்திரசேகரம், ‘ஜனநாயகமும் பொருளாதார அபிவிருத்தியும், ஆசியாவில் இலங்கையின் அனுபவம்’, கூடம் ஜனவரி - மார்ச் *2009*. ப. *12*.
17. Jeyadeva, Uyangoda., ‘Peace watch’, Polity, March - April *2004*. Vol *1*.No. *06* p.*08*
18. Jeyadeva, Uyangoda., ‘JVP Splits’, Vol .*4*, No. *05* Pp. 5 - 6.
19. See, Joseph, Dominick., *(1994)*, The *Dynamics of Mass Communication*. University of Georgia. Althers, Pp *556 - 557*.
20. See, Melinda, Seneviratine., - do -
21. Dayan, Jeyatilleke., ‘The UNP : is a rebirth Possible?’ Daily mirror, Colombo, Sri Lanka, June - *02*, *2010*.